நிலையியற் கட்டளை இலக்கம் **119 (4)** இன் பிரகாரம் அரசாங்க கணக்குக் குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மற்றும் அது தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை முன் வைத்தல்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **290**

நிறுவனத்தின் பெயர் : சுற்றாடல் அமைச்சு

குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைப்பாடுகள்	குறைப்பாடுகளை சரி செய்யும் பொருட்டு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் / நடப்பு நிலை
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன் வைக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாத காலப் பகுதியினுள் விடையளிக்கப்பட்டிருக்கவில்லை.	ஒரு சில சந்தர்ப்பங்களில் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு விடையளிக்கையில் பிற அரச நிறுவனங்களிலிருந்தும் தகல்வல்களைப் பெற்று பல்வேறு பிரிவுகளின் ஊடாகத் தயாரிக்கப்பட்ட பதில்களை ஒன்று சேர்த்து இறுதி அறிக்கையை தயாரிக்க வேண்டியுள்ளது. இதனால் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தாமதமேற்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருப்பினும், எதிர் வரும் காலப் பகுதியில் இத்தகைய தாமத நிலை ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.
அனைத்து வாகனங்களினதும் உரிமத்தை உறுதிப்படுத்தக் கூடிய கடிதங்கள் தம் வசம் காணப்படாமை.	அமைச்சின் பெயர் மாற்றம் காரணமாக அம் மோட்டார் வாகனங்கள் உரித்தான நிறுவனங்களைக் கண்டறிதல் கடினமாகவமைந்துள்ளது. இது தொடர்பா அறிவித்த வண்ணம் கொம்ப்ரோலர் நாயகத்துக்கு பல தடவை ஆலோசனை கோரும் வேண்டுகோள்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.
அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை சித்திரக்கப்பட்டிருக்கவில்லை.	வாகனங்களில் அரச இலட்சினையை ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், தற்சமயம் அதற்கான விவரிக் குறிப்பு தயாரிக்கப்பட்ட வண்ணமுள்ளது.
வாகனங்கள் ஓட்டத்திலிருந்து நிறுத்தப்பட்டு 8 மாதம் காலப் பகுதியை விடக் குறைந்த காலப் பகுதியில் அவை அகற்றப்பட்டிருக்கவில்லை.	வாகனங்களை புறந் தள்ளும் பொருட்டு மதிப்பீட்டு சபையொன்று நியமிக்கப்பட்டிருப்பதுடன், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் மோட்டார் வாகனப் பரீட்சிப்பாளரொருவர் பெயரிடப்பட்டதுடன், வாகனங்களை வெளியகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
குறித்த காலப் பகுதிக்குப் புறம்பாக நிதியங்கள் பிற நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.	தற்சமயம் குறித்த காலப் பகுதியினுள் நிதியங்களை விடுவிப்பதற்குநடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
அனுமதிக்கப்பட்ட எல்லையைத் தாண்டியதாக பணிக் குழு இணைப்பு செய்யப்பட்டிருந்தது.	• 2021 ஆம் ஆண்டின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி எண்ணிக்கை, அவ் வருட கால கட்டத்தில் சுற்றாடல் அமைச்சுக்கென அனுமதிக்கப்பட்டிருந்த பதவியணிக்குப் புறம்பாக 02 பதவிகள் காணப்பட்டதுடன், 2020.12.15 ஆம் திகதிய இலக்கம் 02/02/ADM/වීවි-10 ஐ உடைய கடிதத்தின் மூலம் சேவையின் தேவையின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சுக்கென தற்சமயம் அனுமதிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் எண்ணிக்கையை விட 30 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அனுமதிக்குமாறு நி. பி 71 இன் கீழ் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. • மேலும் மாவட்டச் செயலாளர்களினால் ஒவ்வொரு பிரதேசச் செயலாளர் அலுவலகம் தொடர்பாகவும் ஒரு சுற்றாடல் அதிகாரியை நியமிக்குமாறு முன் வைக்கப்பட்ட கோரிக்கையைக் கருத்திலெடுத்து, எனது இலக்கம் 02/02/ADM/වීවි-10 மற்றும் 2021.05.04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சுற்றாடல் அமைச்சுக்கென 391 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை ஏற்படுத்தும் பொருட்டு நி. பி 71 இன் கீழ் விண்ணப்பப் படிவங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. • இவ் அமைச்சுக்கென முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இலக்கம் DMS/CM/11 மற்றும் 2023.01.25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 299

	அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். • பொது நிர்வாக, உள் நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கென மேலும் 597 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைப்பு செய்யப்பட்டிருப்பினும், 299 உத்தியோகத்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருத்தல் சிக்கல் மிக்க நிலையாகக் காணப்படுவதால், மேலதிக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைப்பு செய்யும் பொருட்டு அரச சேவையின் ஆட் சேர்ப்பு செய்யும் செயற்பாட்டை மதிப்பீடு செய்யும் குழுவிற்கு அனுமதி வழங்குமாறும், இன்றேல் பிற பணியிடத்தில் நிலை நிறுத்தும் பொருட்டு எதிர்ப்பு காணப்படுவதில்லையென 2023.08.14 மற்றும் இலக்கம் ADM/02/02/01 ஐ உடைய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
திட்டமிடப்பட்ட பயிற்சிப் பாட நெறி வாய்ப்புகள் கையளிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களின் அளவு 50% ஐ விடக் குறைவான மட்டத்தில் காணப்பட்டன.	2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலை காரணமாகப் பயிற்சிப் பாட நெறிகளை ஒழுங்கு செய்யும் செயற்பாடு நடைமுறை ரீதியாக சாத்தியப்படாமையால் பயிற்சிப் பாட நெறிகளின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. மேலும், இலக்கம் 21/1596/304/134 மற்றும் 2021.08.30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அன்றிருந்த நடப்பு நிலைக்கு மத்தியில் இச் செலவின விடயங்களிலும் கிரயப் பகுப்பாய்வை மேற்கொண்டு ரூபா 1.2 மில்லியன் நிதியம் மீதப்படுத்தப்படுமென திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் மூலம் அரச செலவினங்களை ஏற்றல் தொடர்பாக விதிக்கப்பட்ட வரையறைகள் காரணமாகத் திட்டமிடப்பட்ட பணிக் குழுவிற்கான பயிற்சிப் பாட நெறிகளை 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.
நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வுக் கோட்பாடு விண்ணப்பப் மட்டத்தில் அல்லது பாதகமான மட்டத்தில் காணப்பட்டது.	நிறுவனத்தின் கணக்கீடு தொடர்பான கோட்பாடு விண்ணப்ப மட்டத்தில் அல்லது பாதகமான மட்டத்தில் காணப்படாதிருப்பதுடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஊடாக முனைப்பழியுள்ள கருத்தே முன் வைக்கப்பட்டுள்ளது.
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துறைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துறைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. "சொபாதம் பியச" கட்டிடம் தொடர்பான பரிந்துறைகள் தொடர்பான நடப்பு நிலை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. • கட்டிடம் அமைந்துள்ள காணியை கையகப்படுத்தித் தருமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பல முறை கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. காணியை கையளித்த பிற்பாடு அதன் மதிப்பீட்டுப் பெறுமானத்தை நிதியற்ற சொத்துக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் சுட்டிக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். • கட்டிடத்தின் இறுதிக் கொடுப்பனவுப் பட்டியல்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டு நிறைவடைந்த பிற்பாடு தங்க வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டத்தரணி பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி
செயலாளர்